# விசாரணை சிறைவாசிகளின் ஆய்வுக் குழுவும் - நீங்களும்

## விசாரணை சிறைவாசிகளின் ஆய்வுக் குழு என்றால் என்ன?

மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் ஆணையின்படி 2015-ஆம் ஆண்டு விசாரணை சிறைவாசிகளின் ஆய்வுக்குழு நிறுவப் பெற்றது. குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை சிறைவாசிகளின் வழக்கு நிலையை ஆய்வு செய்வது இக்குழுவின் பணியாகும். தனது ஆய்வின் அடிப்படையில் தகுதியான சிறைவாசிகளுக்கு உரிய பரிகாரத்தை (அவர்களை விடுதலை செய்வது உட்பட) நீதிமன்றங்களுக்கு இக்குழு பரிந்துரைகளை செய்கிறது.

## யார் யார் இக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பர்?

இது மாவட்ட அளவில் ஒரு மூத்த நீதிபதியை தலைவராக கொண்ட ஐந்து நபர் குழுவாகும். இக்குழுவின் உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு:

- மாவட்ட அமர்வு நீதிபதி - தலைவர்
- மாவட்ட ஆட்சித தலைவர் - உறுப்பினர்
- செயலாளர், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு - உறுப்பினர்
- மாவட்டத்தில் உள்ள அனைத்து சிறைகளின் பொறுப்பு அதிகாரிகள் - உறுப்பினர் / கள்
- மாவட்ட காவல் கண்காணிப்பாளர் - உறுப்பினர்

## இக்குழு எவ்வாறு பணி செய்கிறது?

1 **சிறைவாசிகளின் பட்டியல் தயார் செய்தல்:** அந்தந்த சிறைக்கண்காணிப்பாளர்கள் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய விசாரணை சிறைவாசிகளின் பட்டியலை தயார் செய்து செயலாளர், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக் குழுவிற்கு அனுப்பி வைப்பார், அங்கு எதிர் பக்கத்தில் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தகுதிகளின் அடிப்படையில் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய சிறைவாசிகளின் பட்டியல் தயார் செய்யப்படும்.

2 **கூட்டம் நடத்துதல்:** மேற்கண்ட பட்டியலை மாவட்ட அமர்வு நீதிபதியின் தலைமையில் கூடும் குழு ஆய்வு செய்து, சிறைவாசிகளை தேர்ந்தெடுத்து அவர்களுக்குரிய பொருத்தமான பரிந்துரைகளை செய்யும்.

3 **பரிந்துரைகளும் நடவடிக்கைகளும்:** அவ்வாறு பரிந்துரைக்கப்பட்ட சிறைவாசிகளின் பட்டியல் அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு பின்னர் உரிய நீதிமன்றத்தின் நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்படும்.

4 **குழுவின் தொடர் நடவடிக்கைகள்:** இக்குழுவானது மேற்கண்டவாறு நீதிமன்றத்தின் நடவடிக்கைக்கு அனுப்பிவைக்கப்பட்ட பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட மேல் நடவடிக்கைகளை தொடர்ந்து வரும் கூட்டங்களில் ஆய்வு செய்து ஒவ்வொரு வழக்கின் நிலைமையை ஆவணப்படுத்தி வைக்கும்.

## தங்களின் வழக்கு ஆய்வுக்கு உட்படுத்தப் படுவதாலேயே தங்களுக்கு விடுதலை கிடைத்து விடுமா?

இல்லை, தங்களின் வழக்கு இக்குழுவினால் ஆய்வு செய்யப்படுவதினாலோ, தங்களின் வழக்கினை மேல் நடவடிக்கைக்காக பரிந்துரைப்பதினாலேயோ நீங்கள் விடுதலை அடைவீர்கள் என்று அர்த்தம் கொள்ளக்கூடாது. இறுதி முடிவு உங்களின் வழக்கு நடைபெறும் நீதிமன்றத்தால் மட்டுமே எடுக்கப்படும். உங்கள் வழக்கின் மீதான பரிந்துரைகள் மற்றும் மேல்நடவடிக்கைகளை அறிந்துகொள்ள நீங்கள் சிறை அதிகாரிகளையோ அல்லது உங்களது வழக்கறிஞர்களிடமோ தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

## தங்களின் வழக்கு ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டு மீண்டும் ஆய்வுக்கு உட்படுத்தப்படுமா?

ஆம், ஒருவரது வழக்கினை இக்குழு பன்முறை ஆய்வுக்கு உட்படுத்துவதில் எந்த தடையும் இல்லை. ஆய்வுக் குழு உங்களின் வழக்கினை ஏற்கனவே பரிந்துரைக்காமல் இருந்தாலோ அல்லது பரிந்துரையை உங்களின் நீதிமன்றம் நிராகரித்தாலோ உங்களின் வழக்கு ஆய்வுக் குழுவின் பார்வைக்கும் ஆய்வுக்கும் மீண்டும் உட்படுத்தப்படலாம்.

## நீங்கள் தண்டனை சிறைவாசியாக இருந்தால் உங்களின் வழக்கு ஆய்வுக் குழுவின் ஆய்வுக்கு உட்படுத்தப்படுமா?

ஆம், தண்டனை சிறைவாசிகளின் வழக்கினையும் இக்குழு ஆய்வுக்கு உட்படுத்தும். என்ன மாதிரி சமயங்களிலென்றால்

i) நீங்கள் உங்களின் தண்டனை காலத்தை நிறைவு செய்திருப்பின்

ii) தண்டனை குறைப்பின் (Remission) மூலமாக நீங்கள் விடுதலை பெற தகுதியுடையவராக இருப்பின்

ஆய்வுக்குழு நீங்கள் விடுதலை செய்யப்படாமல் இருப்பதின் காரணத்தை அறிந்து, உங்களின் விடுதலையை உறுதி செய்யும் வண்ணம் உரிய பரிந்துரையை நீதிமன்றத்திற்கு வழங்கிடும்.

## உங்களின் வழக்கு ஆய்வுக் குழுவின் ஆய்வுக்கும் மேலான பரிந்துரைகளுக்கும் தகுதியானதுதானா என்பதை அறிந்து கொள்ள நீங்கள் யாரை தொடர்பு கொள்ள வேண்டும்?

இது சம்மந்தமான சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கு நீங்கள் உங்களுடைய வழக்கறிஞரை தொடர்பு கொள்ளலாம். அல்லது உங்களின் குடும்ப உறுப்பினர்களை வழக்கறிஞரோடு தொடர்பு கொள்ள சொல்லலாம் அல்லது சிறைக்கு வரும் இலவச சட்ட உதவி வழக்கறிஞரையோ அல்லது சிறையிலுள்ள சட்ட உதவி மையத்தையோ நீங்கள் அனுகலாம்.


CHRI
Commonwealth Human Rights Initiative
working for the *practical* realisation of human rights in the Commonwealth

**Commonwealth Human Rights Initiative**
3rd Floor, 55A, Siddhartha Chambers, Kalu Sarai, New Delhi - 110 016
Tel: + 91-11-43180200, +91-11-43180221 (Direct) Fax: +91-11-43180217
Email: info@humanrightsintiative.org. Website: www.humanrightsinitiative.org


## நீங்கள் ஒரு விசாரணை சிறைவாசியாக இருந்தாலும் மற்றும்

நீங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு மிகாமல் தண்டனை பெறக்கூடிய சிறு குற்ற வழக்கில் ஈடுபட்டதாக வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தால்; அல்லது (இங்கு சிறுகுற்றம் என்பது சில மாதங்களே சிறை தண்டனை வழங்கக் கூடிய அல்லது சிறிய அபராத தொகையை தண்டனையாக கொண்ட குற்றங்களை உள்ளடக்கியதாகும்)

நீங்கள் 19 வயதிலிருந்து 21 வயதிற்குட்பட்டவராக இருந்து அதிகபட்சமாக 7 ஆண்டுகளுக்கு மிகாமல் தண்டனை பெறக்கூடிய குற்றத்தில் வழக்கு பதியப்பெற்று குறைந்த பட்சம் நான்கில் ஒரு பங்கு ¼th காலத்தை சிறையில் கழித்தவராயின் ; அல்லது

நீங்கள் திருட்டு மற்றும் ஏமாற்று வேலை உட்பட சிறு குற்றத்தில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு, இரண்டு ஆண்டுகளுக்கு மிகாமல் தண்டனை பெறக்கூடிய அதாவது இ.பி.கோ., 379, 380, 381, 404 மற்றும் 420 ஆகிய பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தாலோ ; அல்லது

60 DAYS உங்களுக்கு எதிராக அதிகபட்சமாக பத்து ஆண்டுகளுக்கு குறைவான தண்டனை பெறக்கூடிய குற்றத்தின் கீழ் வழக்கு பதியப்பட்டு நீங்கள் 60 நாட்களை சிறையில் கழித்திருந்து உங்களின் மீது குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்படாமல் இருந்தாலோ; அல்லது

90 DAYS உங்களுக்கு எதிராக அதிகபட்சமாக 10 மற்றும் அதற்கும் மேற்பட்ட ஆண்டுகள் சிறை தண்டனை பெறக்கூடிய குற்றத்தின் கீழ் வழக்கு பதியப்பட்டு நீங்கள் 90 நாட்கள் சிறையில் கழித்திருந்து உங்களின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படாமல் இருந்தாலோ ; அல்லது

180 DAYS உங்களுக்கு எதிராக போதை பொருட்கள் மற்றும் மனமயக்கும் பொருட்கள் தடுப்பு சட்டம் 1985 (NDPS Act 1985) கீழ் வணிக ரீதியில் போதை பொருள் வைத்திருந்ததாக குற்ற வழக்கு பதியப்பட்டு நீங்கள் 180 நாட்களை சிறையில் கழித்திருந்து உங்களின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படாமல் இருந்தாலோ ; அல்லது

உங்களுக்கு எதிராக அதிகபட்சமாக மரண தண்டனை அல்லாத குற்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு அவ்வழக்கின் அதிகபட்ச தண்டனை காலத்தின் பாதியை நீங்கள் சிறையில் கழித்திருந்தாலோ; அல்லது

7 உங்களுக்கு எதிராக "பிணையில் வரக்கூடிய" குற்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு நீங்கள் 7 நாட்களுக்கு மேல் சிறையில் இருந்தாலோ; அல்லது (இங்கு பிணையில் வரக்கூடிய குற்றங்களில் குற்றம்சாட்டப்பட்டவருக்கு பிணையத்தின் அடிப்படையில் வரக்கூடிய உரிமை உள்ளது என்பதை தெரிந்து கொள்க)

உங்களுக்கு எதிராக முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் (மாஜிஸ்திரேட்) முன்பாக நடத்தப்படக் கூடிய பிணையில் வெளிவர இயலாத குற்றத்தின் கீழ் வழக்கு பதியப்பட்ட நிலையில், அவ்வழக்கு விசாரணையில் சாட்சியம் பதிவு செய்யத் தொடங்கிய முதல் நாளிலிருந்து 60 நாட்களுக்குள் உங்களின் வழக்கு முடிவடையாமல் இருந்தாலோ ; அல்லது
(பொதுவாக அதிகபட்சமாக 3 ஆண்டுகளுக்கு மிகாமல் தண்டனை பெறக்கூடிய வழக்குகள் அனைத்தும் முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் (மாஜிஸ்திரேட்) முன்பாக நடைபெறும்)

உங்களுக்கு எதிராக பதியப்பட்ட வழக்கு சட்டப்படி சமரசமாக தீர்த்துக்கொள்ளக் கூடிய வழக்காக உள்ளதெனில் ; அல்லது
(பொதுவாக சமரசமாக தீர்த்துக்கொள்ளக் கூடிய குற்றங்கள் என்பது 2 ஆண்டுகளுக்கும் குறைவான தண்டனை பெற்று தருகிற குற்றங்களாகும். இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டம் (Cr.P.C) பிரிவு 320 சமரசமாக தீர்த்துக்கொள்ளக் கூடிய குற்றங்களை விவரிக்கிறது)

நீங்கள் நோய்வாய்ப்பட்டிருந்தாலோ அல்லது பலவீனமான உடல் நிலையில் இருந்தாலோ உங்களுக்கு அவசியமான மருத்துவ சிகிச்சையின் தேவை இருந்தாலோ ; அல்லது

தாங்கள் தெளிவற்ற மனநிலை மற்றும் மனநிலை சரியில்லாதவராக இருந்தலோ; அல்லது

தங்களுக்கு நீதிமன்றம் பிணை வழங்கியும் தங்களால் பிணை தொகையினை செலுத்த முடியாத நிலையில் இருந்தாலோ ; அல்லது

தங்கள் இந்தியக் குற்றவியல் நடைமுறை சட்டத்தின் (Cr.P.C) 107, 108, 109 அல்லது 151-வது பிரிவுகளின் கீழ் தடுப்புக்காவலில் இருந்தாலோ; அல்லது

தாங்கள் ஒரு பெண்ணாக இருந்தாலோ தங்களின் வழக்கு இக்குழுவின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் (Cr.P.C) முதலாம் அட்டவணை "பிணையில் வரக்கூடிய குற்றங்கள்", " அதிகபட்ச தண்டனை" "முதல் வகுப்பு நீதித்துறை நடுவரால் நடத்தப்படும் குற்ற வழக்குகள்" குறித்த விவரங்களை வகைப்படுத்தி கூறுகிறது. நீங்கள் குற்றம் சாட்டப்பட்ட வழக்கு இக்குழுவின் ஆய்வுக்கு உகந்ததா என்பதை சிறையில் உள்ள சட்ட உதவி மையத்திடமிருந்தோ அல்லது சிறைக்கு வரும் வழக்கறிஞரிடம் இருந்தோ நீங்கள் போதிய தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.

**உங்களின் வழக்கு உங்கள் மாவட்டத்தில் உள்ள விசாரணை சிறைவாசிகளின் ஆய்வுக் குழுவின் ஆய்வுக்கு உட்படுத்த உகந்ததாக இருக்கலாம் என்பதை தெரிந்துகொள்ளுங்கள்.**